செய்தி வெளியீடு எண் : 1423 நாள் : 12.09.2024

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் உள்ள மகாகவி பாரதியார் பிறந்த இல்லம் மற்றும் கோவில்பட்டியில் உள்ள கரிசல் காட்டு இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் கி.ராஜநாராயணன் நினைவரங்கத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்**

---

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (12.09.2024) தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் பிறந்த இல்லத்திலுள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஆய்வு செய்து, மகாகவி பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் வைக்கப்பட்டுள்ள வரலாற்று புகைப்படங்கள் மற்றும் மகாகவி பாரதியார் பயன்படுத்திய பொருட்களைப் பார்வையிட்டார்கள். மேலும், மகாகவி பாரதியார் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த பார்வையாளர்கள் பதிவேட்டில் தனது குறிப்புகளைப் பதிவு செய்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, கோவில்பட்டியில் அமைந்துள்ள கரிசல்காட்டு இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் கி.ராஜநாராயணன் நினைவரங்கத்தில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், மின்னணு நூலகத்தில் அன்னாரது படைப்புகள் மற்றும் படங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, வரலாற்றுப் புகைப்படங்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களைப் பார்வையிட்டார்கள்.நினைவரங்கத்தில் வைக்கப்பட்டிருந்த பார்வையாளர்கள் பதிவேட்டில் தனது குறிப்புகளைப் பதிவு செய்தார்கள்.

பின்னர் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் விடுதலைப் போர் தியாகிகளுக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும், தியாகத் திருமக்களுக்கும் எழிலொழுகும் வடிவங்களில் நினைவுச்சின்னங்கள் அமைக்கப்பட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலமாக பராமரிக்கப்படுகின்றன.

அதாவது நம் நாட்டு விடுதலைக்கு வித்திட்ட வீரத் தியாகிகள், தமிழ்நாட்டின் மிகச்சிறந்த ஆளுமைகள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுப் பெருமையினைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூக நீதி கருத்துக்களை விரைந்து வளர்த்த தலைவர்கள், கவிஞர்கள், இசை மேதைகள், இந்திய விடுதலைப்போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாட்டின் தியாகத் தலைவர்கள் முதலானோரின் நினைவுகளைப் போற்றி பெருமைப்படுத்திடும் வண்ணம் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நினைவகங்கள், அரங்கங்கள்,

நினைவுத்தூண்கள், நினைவுச்சின்னங்கள், நினைவு வளைவுகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் சிறப்புகளையும், பெருமைகளையும் மாணவ – மாணவியர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என அனைவரும் அறிந்து பயனடையும் வகையில் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. அந்த வகையில் இன்றைய தினம் தூத்துக்குடி மாவட்டத்தில் எட்டயபுரத்திலுள்ள மகாகவி பாரதியார் பிறந்த இல்லம் மற்றும் கோவில்பட்டியிலுள்ள கரிசல்காட்டு இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் கி.ராஜநாராயணன் நினைவரங்கத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கோவில்பட்டி அருகே உள்ள இடைச்செவல் கிராமத்தில் பிறந்து அனைவருடைய கவனத்தையும் ஈர்த்தவர். சமூகத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டவராக, நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை உருவாக்கி சிறந்த சமூகவாதியாக ஒரு அற்புதமான மனிதராக வாழ்ந்து மறைந்த கரிசல்காட்டு இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களுடைய பெருமையைப் போற்றுகின்ற வகையில் கோவில்பட்டியில் திருவுருவச்சிலையுடன் கூடிய நினைவரங்கம் அமைக்கப்பட்டு இன்றைக்கு இங்கு இருக்கக்கூடிய மக்கள் மற்றும் வெளியில் இருந்து வரக்கூடிய பார்வையாளர்கள் எல்லோரும் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு குறித்து தெரிந்துகொள்கின்ற வகையில் அவர்கள் படைத்த சில நூல்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், இதுபோன்ற சுதந்திரப் போராட்ட தியாகிகளாக இருந்தாலும் சரி, தமிழ்மொழியின் மீது மிகுந்த அக்கறை கொண்டவர்களாக இருந்தாலும் சரி அவர்களின் நினைவுகளைப் போற்றுகின்ற வகையில் அவர்களுக்கெல்லாம் திருவுருவச்சிலைகளும், நினைவகங்களும்; அமைத்து பெருமைப்படுத்தும் அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு.

பேரறிஞர் அண்ணா அவர்களின் காலங்களிலும் சரி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் காலங்களிலும் சரி அவர்களுடைய வழியில் செயல்பட்டுவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு இதுபோன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது என மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த ஆய்வின்போது, கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மகாலட்சுமி, அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu